பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 12 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. தேசிய பஞ்சாயத்து விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.
2. ஸ்மார்ட் இந்தியா ஹாக்கத்தான் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் இளம் கண்டுபிடிப்பாளர்களுடன் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று காணொலி வாயிலாக கலந்துரையாடுகிறார்.
3. மாநிலங்களவைத் தலைவர் மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கண்டனம் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் முதலமைச்சரின் சூரிய எரிசக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தில் குறைந்த அளவு குடும்பங்களே பயனடைந்துள்ளதாக இந்திய கணக்கு தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. உலக செஸ் சாம்பியன் போட்டியின் 13-வது சுற்றில் இந்தியாவின் குகேஷ் இன்று நடப்பு சாம்பியன் சீனாவின் **Ding liren** -எதிர்கொள்கிறார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

தேசிய பஞ்சாயத்து விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

விஞ்ஞான் பவனில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பல்வேறு பிரிவுகளில் 45 பேர் விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சமுதாய வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் விருதுபெறும் ஊராட்சிகளில் அமல்படுத்தப்பட்ட முன்மாதிரியான செயல்பாடுகள் குறித்த புத்தகத்தை மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன்சிங் வெளியிடுகிறார்.

[]<<<>>>[]

ஸ்மார்ட் இந்தியா ஹாக்கத்தான் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் இளம் கண்டுபிடிப்பாளர்களுடன் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று காணொலி வாயிலாக கலந்துரையாடுகிறார்.

நாடு முழுவதும் 51 மையங்களில் நடைபெறவுள்ள ஏழாவது ஹாக்கத்தான் இறுதிப்போட்டியை மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் காணொலி மூலம் தொடங்கி வைக்கிறார்.

இதில் ஆயிரத்து 300 மாணவர்கள் பங்கேற்கிறார்கள்.

அன்றாட வாழ்க்கையில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் மாணவர்களிடையே இப்போட்டி நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டு 250-க்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மத்திய அரசின் 54 அமைச்சகங்களும், மாநில அரசுகளின் துறைகளும், தொழில் நிறுவனங்களும் வழங்கியுள்ளன.

சென்னையில் ஆறு பொறியியல் கல்லூரிகளிலும், கோவையில் ஒரு பொறியியல் கல்லூரியிலும் இப்போட்டிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

மாநிலங்களவைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை அளித்துள்ளனர்.

மாநிலங்களவையின் செயலகத்தில் இந்த தீர்மானம் அளிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் உறுப்பினர் திரு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

அவையை நடத்துவதில் அவைத்தலைவர் பாரபட்சத்துடன் நடந்து கொள்வதாகவும், எனவே அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன்மொழிவதைத் தவிர எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணிக்கு வேறு வழியில்லை என்றும் கூறினார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை கருத்தில் கொண்டு எதிர்க்கட்சிகள் இத்தகைய முடிவை எடுத்திருப்பதாகவும் திரு ஜெய்ரலாம் ரமேஷ் கூறினார்.

இதனிடையே மாநிலங்களவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வரும் எதிர்க்கட்சிகளின் முடிவுக்கு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சியும், அதன் கூட்டணி கட்சிகளும் அவைத்தலைவர் பதவியை அவமதிப்பதாக குற்றம்சாட்டினார்.

அவையில் எதிர்க்கட்சிகள் ஆக்கப்பூர்வமாக செயல்பட தவறிவிட்டதாகவும் அவர் கூறினார்.

மக்களவை, மாநிலங்களவை தலைவர்கள் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கை வைக்க வேண்டுமென்றும் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக் கொண்டார்,

இந்நிலையில் திரு ஜக்தீப் தன்கரை நேற்று மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், திரு கிரண் ரிஜிஜூ, திரு சர்பானந்த சோனாவால், டாக்டர் எல் முருகன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

[]<<<>>>[]

ரஷ்யா சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புட்டினை மாஸ்கோவில் சந்தித்து பேசினார்.

பாதுகாப்பு தொடர்பான இந்தியா – ரஷ்யா அரசுகளுக்கு இடையேயான ஆணையத்தின் 21-வது கூட்டத்தையொட்டி நடைபெற்ற இந்த சந்திப்பின்போது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தியா – ரஷ்யா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு அதிகரித்து வருவது குறித்து இரு தலைவர்களும் மகிழ்ச்சி தெரிவித்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா – ரஷ்யா மக்களுக்கு இடையேயான உறவுகளும் வலுவடைந்து வருவதாகவும், இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவு வருங்காலத்திலும் தொடரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை நேற்று புதுதில்லியில் அமெரிக்காவைச் சேர்ந்த யூத குழுவினர் சந்தித்து பேசினர்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான இருதரப்பு உறவுகள் மற்றும் மேற்கு ஆசியா நிலைமை தொடர்பாக விவாதித்தனர்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவை நீண்டகாலமாக அமெரிக்க யூத குழுவினர் ஆதரித்து வருவதாக சமூக வலைதளத்தில் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்,

வெளியுறவுத்துறை அமைச்சர் நேற்று ஐரோப்பிய யூனியனுக்கான வெளியுறவு அமைச்சகத்தின் பிரதிநிதி காஜா கலாஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஐரோப்பா, மேற்கு ஆசியா, இந்தோ – பசிபிக் பகுதிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக அவர் விவாதித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த பத்து ஆண்டுகளில் வெளிப்படைத்தன்மையுடனும், மக்களை மையமாகக் கொண்டும் செயல்பட்டு வருவதாக மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மத்திய தகவல் ஆணையத்தின் 16-வது ஆண்டு கூட்டத்தில் பேசிய அவர், மத்திய அரசின் 80 சதவீத அலுவலகங்கள் 2018-ஆம் ஆண்டு முதல் ஆன்லைன் வாயிலாக இணைக்கப்பட்டுள்ளது என்றார்.

கடந்த பத்து ஆண்டுகளில் தகவல் உரிமை கோரும் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் பெருமளவு அதிகரித்துள்ளதாகவும், இது நிர்வாகம் வெளிப்படையாக செயல்படுவதை எடுத்துக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மனுக்கள் மீது மத்திய அரசு உடனுக்குடன் தீர்வு காண்பதால் மக்களுக்கு அரசு மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தலைமை தகவல் ஆணையர் திரு ஹீராலால் சமாரியா, தகவல் உரிமைக்கோரும் சட்டம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மாநில தகவல் ஆணையங்கள் பயிலரங்ககளை நடத்தி உள்ளதாகக் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் முதலமைச்சரின் சூரிய எரிசக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தில் குறைந்த அளவு குடும்பங்களே பயனடைந்துள்ளதாக இந்திய கணக்கு தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின் நடைமுறைகள், வரவு செலவு திட்டமேலாண்மை மற்றும் நிதி தொடர்பான விவரங்கள் மீது இந்திய கணக்கு தணிக்கை தலைவரின் அறிக்கை சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இதையொட்டி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முதன்மை கணக்கு தணிக்கை அதிகாரி திரு டி ஜெய்சங்கர், பசுமை வீடு திட்டம் அமல்படுத்தப்பட்ட 57 கிராமங்களில் நடத்தப்பட்ட தணிக்கையில் பத்தாயிரத்து 887 குடும்பங்கள் மட்டுமே சூரிய எரிசக்தி திட்டத்தில் பயனடைந்துள்ளதாக கூறினார்.

பேருந்து கட்டணத்தை சரியான காலகட்டத்தில் உயர்த்தாத காரணத்தால் தமிழக போக்குவரத்துக் கழகத்தின் மொத்த கடன் ஆறாயிரத்து 467 கோடியிருந்து 21 ஆயிரத்து தொள்ளாயிரத்து 80 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

கடலோர பகுதிகளில் ஒழுங்குமுறை விதிகளை மீறி கட்டுமானங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநில அரசின் பல்வேறு பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்றும் தமிழ்நாடு முதன்மை கணக்கு தணிக்கை அதிகாரி தெரிவித்தார்.

[]<<<>>>[]

இளைஞர்களின் திறமையை ஊக்குவிக்கும் வகையில் இளையோர் திருவிழாவை நேரு யுவகேந்திரா மாவட்டந்தோறும் நடத்தி வருகிறது.

வேலூரில் நேற்று நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட மாணவிகள் இந்த விழாவில் அறிவியல் கண்காட்சி பேச்சுப்போட்டி என பல்வேறு போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்ததாக மாணவிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - மாணவிகள் ) -42--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும், கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்காலிலும் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக அது கூறியுள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி, பெரம்பலூர், உள்ளிட்ட 11 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசுவதால் மறு அறிவிப்பு வரும் வரை மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கனமழை எச்சரிக்கையை அடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

உலக செஸ் சாம்பியன் போட்டியின் 13-வது சுற்றில் இந்தியாவின் குகேஷ் இன்று நடப்பு சாம்பியன் சீனாவின் **Ding liren** -எதிர்கொள்கிறார்.

குகேஷ் இன்று வெள்ளை காய்களுடன் விளையாடவுள்ளார்.,

இன்னும் இரண்டு சுற்றுப் போட்டிகளே உள்ள நிலையில் இருவரும் ஆறு புள்ளிகளுடன் சம நிலையில் உள்ளனர்.

சாம்பியன் பட்டத்தை வெல்வதற்கு ஏழரை புள்ளிகள் தேவைப்படுகிறது.

14-வது சுற்றிலும் இருவரும் சம நிலை பெற்றால் வெற்றிதோல்வியை தீர்மானிக்க டை-பிரேக்கர் முறை கடைபிடிக்கப்படும்.

*End of News*